# <u>மாவட்ட ஆட்சியர் செய்திக் குறிப்பு</u>

இராமநாதபுரம் மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை கீழ் மிஷன்வாட்சல்யா திட்டத்தின் அடிப்படையில் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் காலியாக உள்ள சட்டம் சார்ந்த நன்னடத்தை அலுவலர் பணியிடம் (1 காலி பணியிடம்) நிரப்புவதற்கு மாதம் ரூ.27,804/– (ரூபாய் இருபத்து ஏழாயிரத்து எண்ணாற்று நான்கு) மட்டும். தொகுப்புதியத்தில் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் B.L or L.L.B தேர்ச்சி பெற்று, கல்வி தகுதி (10 + 2 + 5) or (10+2+3+3) பெண்கள் மற்றும் குழந்தை உரிமைகள் சார்ந்த அரசு / தன்னார்வ தொண்டு நிறுவனம் / சட்ட விஷயங்களில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவத்துடன், பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமை மற்றும் பாதுகாப்பு பிரச்சனைகள் பற்றிய நல்ல புரிதலுடன் கூடிய 42 வயதிற்குட்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தை சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்களை www.ramnanathapuram.nic.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம், அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம், பூர்த்திசெய்த விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களுடன் இணைத்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், மாவட்ட நீதி மன்றம் தென்புறம், இராமநாதபுரம் – 623 503 என்ற முகவரிக்கு 27.12.2024 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு 04367 231098 (அ) 04567 29956 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொள்ளலாம்.

9/11/24

மாவட்ட ஆட்சித்தலைவர்,
இராமநாதபுரம்.

Dapo 9/11/2024

2/2